வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 27.05.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 135 பக்கங்கள் : 12

# கூடிய ஆசனம் பெற்ற தமிழ் கட்சிகளுக்கு முதல்வர், தவிசாளர் தெரிவுகளில் ஆதரவு

## தமிழ்த் தேசிய பேரவை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

**தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் கூடிய ஆசனங்களை பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மாநகர முதல்வர், மற்றும் தவிசாளர் தெரிவுகள் தொடர்பில் தமிழ் தேசியப் பேரவை ஆதரவு வழங்கும் என தமிழ்த் தேசிய பேரவையின் தலைவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

இதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டாவது நிலையில் கூடிய ஆசனங்களை பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு பிரதி முதல்வர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகள் தொடர்பில் தமிழ்த் தேசிய பேரவை ஆதரவு வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ். கச்சேரி அருகாமையிலுள்ள வை. எம். சி. ஏ. மண்டபத்தில் தமிழ்த் தேசிய பேரவைத் தலைவர்கள் மற்றும் தமிழ்த் தேசிய பேரவையின் சார்பில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பெயரிலும் அதன் சைக்கிள் சின்னத்திலும் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற மேலதிக ஆசனங்கள் மூலம் கட்சியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கூடிக் கலந்துரையாடி கொள்கை அடிப்படையில் ஒருமனதாக மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் வெளிப்பாடு, சபைகளின் ஆட்சி நிர்வாகத்தை அமைப்பதில் மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு

11

# சமையல் செய்த இளம் பெண் தீப்பற்றி மரணம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணத்தில் வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.


புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய் பகுதியை சேர்ந்த கஜன் ஜனுயா (வயது 23) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பெண் கடந்த 20ஆம் திகதி சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இதன்போது அடுப்புக்கு மண்ணெண்ணெய் ஊற்றிய வேளை அது

11

# யாழ். இந்திய தூதரக அதிகாரி ஓமந்தை விபத்தில் உயிரிழப்பு!

### மனைவி உட்பட மூவர் அவசர சிகிச்சை பிரிவில்



வவுனியா, மே 27

யாழ் - கண்டி பிரதான வீதியில் வவுனியாவின் ஓமந்தை பகுதியில் நேற்று அதிகாலை 4.40 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். அத்துடன், அவரின் மனைவி, மகன் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கார் ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

11

# யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒரே பிரசவத்தில் ஐந்து சிசுக்கள்!

யாழ்ப்பாணம், மே 27

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள் பிறந்துள்ளன என்று யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்தக் குழந்தைகள் நேற்றுமுன்தினம் பிறந்தன என்றும் குழந்தைகள் தற்போது விசேட பாராமரிப்பு பகுதியில் வைத்து பராமரிக்கப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு 5 குழந்தைகளை பிரசவித்தார் என்றும் குழந்தைகளும் தாயும் நலமாக உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-05)

# அரசுக்கு ஒரு வார காலக்கெடு விதித்துள்ளது மருத்துவர் சங்கம்

கொழும்பு, மே 27

மருத்துவர்களின் கூடுதல் நேரப் பணி மற்றும் விடுப்பு கொடுப்பனவுகளைக் குறைப்பது தொடர்பான திருத்தப்பட்ட சுற்றறிக்கையை ஒரு வாரத்துக்குள் வெளியிட வேண்டும் என்றும், இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் நிர்வாகக் குழு இந்த முடிவை எட்டியதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடகத் தொடர்பாளர் வைத்தியர் சமில் விஜயசிங்க தெரிவித்தார்.

தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர்ந்து, கொடுப்பனவுகளை அவற்றின் முந்தைய

11

# அலைபேசியுடன் அதிக நேரத்தை செலவிடும் இன்றைய பிள்ளைகள்

### வடக்கு மாகாண ஆளுநர் கவலை

யாழ்ப்பாணம், மே 27

மக்களுக்கு சேவை செய்வதற்கே அரசாங்க நிறுவனங்கள் இருக்கின்றனவே தவிர மக்களை அலைக்கழிப்பதற்கு அல்ல என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இன்றைய பிள்ளைகள் அதிகமாக அலைபேசியுடனே நேரத்தைச் செலவிடுகின்றனர் எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாண பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தால் 4ஆவது ஆண்டாகவும் நடத்தப்பட்ட யாழ்.பாடி சதுரங்கச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை பிரதேச செயலர் சா. சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

11

# குளத்தில் மீன்பிடித்தவர் நீரில் மூழ்கி பலி

வவுனியா, மே 27

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் குளத்தில் மூழ்கி இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

குறித்த இளைஞர் நேற்று மாலை கனகராயன்குளத்தில் மீன்பிடிப்பதற்காக சென்றுள்ளார். இதன்போதே அவர் குளத்தில் மூழ்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த ம. ஈழவன் (வயது 23) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக கனகராயன் குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்க கடற்படைக்கு ஆலோசனை!



கொழும்பு, மே 27

இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கும், மீன்பிடி என்ற போர்வையில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும்

11

# இலங்கைக்கு நியூசிலாந்து வழங்கும் நிதியுதவி மேலும் விரிவுபடுத்தப்படும்

### அந்நாட்டு பிரதி பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மே 27

எதிர்காலத்தில் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவியை மேலும் விரிவுபடுத்த நியூசிலாந்து அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அந்நாட்டு பிரதிப் பிரதமர் வின்ஸ்டன் பீற்றர்ஸ் தெரிவித்தார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ வருகை தந்துள்ள நியூசிலாந்து பிரதிப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றர்ஸுக்கும் ஜனாதிபதி அநுர குமார

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு ஒழிப்பு திட்டம்:
# 128,824
## வளாகங்கள் சோதனை

கொழும்பு, மே 27

15 மாவட்டங்களில் மே 19 முதல் 24 வரை நடத்தப்பட்ட சிறப்பு டெங்கு ஒழிப்பு திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 824 வளாகங்கள் சோதனை செய்யப்பட்டதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 677 வீடுகள், 257 பாடசாலைகள், 304 பிற கல்வி நிறுவனங்கள், 789 அரசு அலுவலகங்கள், 5 ஆயிரத்து 25 தனியார் நிறுவனங்கள், 700 கட்டுமானத் தளங்கள், 195 தொழிற்சாலைகள், 263 பொது இடங்கள் மற்றும் 514 மத வளாகங்கள் ஆகியவை அடங்கும்.

இவற்றில், 31 ஆயிரத்து 145 வளாகங்களில் நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டன.

3,916 இடங்களுக்கு சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

தென்மேற்கு பருவமழை தீவிரமாகப் பெய்து வருவதால் டெங்கு அபாயம் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. (அ)

# ராஜபக்ஷக்களை மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்

### அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, மே 27

**மாபெரும் கொலைக் குற்றங்களை இழைத்து - ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு நாட்டைப் படுகுழியில் தள்ளிய ராஜபக்ஷக்களை மக்கள் எவரும் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள் என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.**

ராஜபக்ஷக்களைப் பழிவாங்குவது தேசிய மக்கள் சக்தி அரசின் நோக்கம் அல்ல. ராஜபக்ஷக்கள் இழைத்த குற்றங்கள் தொடர்பில் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும். அதில் நாம் தலையிட மாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்

ராஜபக்ஷக்களைச் சிறைக்கு அனுப்புவதால் நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தீர்வு கிடையாது என அநுர அரசிடம் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

நாமல் எம்.பியின் இந்தக் கருத்து தொடர்பில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சிக்கு முடிவு கட்டவே நாட்டு மக்கள் வீதியில் இறங்கி போராடினார்கள். இறுதியில் ராஜபக்ஷக்களை மக்கள் வீட்டுக்கு அனுப்பினார்கள்.

மூன்றிலிரண்டுப் பெரும்பான்மைப் பலத்துடன் தேசிய மக்கள் சக்தி கட்சியை மக்கள் ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு வருகின்றோம். விரைவில் மக்களின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வு காண்போம். ராஜபக்ஷக்கள் எமக்கு அறிவுரை கூறத் தேவையில்லை - என்றார். (அ)

## மருத்துவ முகாமும் மரம் நடுகையும்



யாழ்ப்பாணம், மே. 27

யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் மருத்துவ முகாமும் மர நடுகை வேலைத்திட்டமும் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரி பழைய மாணவரும் மருத்துவருமான சசிகரனின் ஒழுங்கமைப்பில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களின் பங்கேற்புடன் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொற்றா நோய்கள் மற்றும் வீதி விபத்து தொடர்பாக விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது.

தொற்றா நோய்கள் தொடர்பான கருத்தமர்வை மருத்துவர் சிவரஞ்சனியும் வீதி விபத்துகள் தொடர்பான கருத்தமர்வை குழந்தை சத்திரசிகிச்சை மருத்துவ நிபுணர் சயந்தனும் வழங்கியிருந்தனர். (அ)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று தீயணைப்பு பயிற்சி ஒத்திகை

கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சி மாவட்ட செயலக உற்பத்தித் திறன் பிரிவின் ஏற்பாட்டில் தீ அணைப்பு பயிற்சி தொடர்பான ஒத்திகை நேற்று காலை மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட செயலகக் கட்டடத் தொகுதியில் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்பு கருவிகளை, அனர்த்த காலங்களில், களத்தில் எல்லோரும் உடனடியாக பயன்படுத்தல் மற்றும் குறித்த கருவிகளின் பயன்பாடுகள் தொடர்பில், செயன்முறை ரீதியாக விழிப்புணர்வூட்டும் நோக்கில் இந்த ஒத்திகை இடம்பெற்றது.

தீ விபத்து ஏற்பட்டால் எப்படி தடுப்பது, விபத்து ஏற்பட்டால் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள் தீ அணைப்புக் கருவிகளின் பயன்பாடுகள் மற்றும் கையாளுகை தொடர்பான தெளிவூட்டல் என்பன தொடர்பில் மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்புப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் சி.கோகுலராஜா, ஒத்திகை மூலம் விளக்கினர்.

தொடர்ந்து தீ அணைப்பு கொள்கலன்களை கையாளுகின்ற முறைமை தொடர்பாக, செயன்முறை ரீதியாக விளக்கமளிக்கப்பட்டு, உத்தியோகத்தர்களும் கையாள்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டு தெளிவூட்டப்பட்டுள்ளது.

இந்த செயலமர்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மேலதிக அரசாங்க அதிபர் இ. நளாயினி, பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள், உற்பத்தித்திறன் பிரிவு உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், பொது மக்கள் பங்கேற்றனர். (அ)

# துணை மருத்துவ சேவைக்கு 179 பேர்

கொழும்பு, மே 27

துணை மருத்துவ சேவையில் நான்கு பதவிகளை உள்ளடக்கிய 179 பேருக்கு பாடநெறிக்கான ஆட்சேர்ப்பு கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை இலங்கை மன்ற கல்லூரியின் கேட்போர் கூடத்தில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெறவுள்ளது.

மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவல்லுநர் பதவிக்கு 41 பேரையும் கதிரியக்க நிபுணர் பதவிக்கு 74 பேரையும் பிசியோதெரபிஸ்ட் பதவிக்கு 53 பேரையும் ஓடியோலஜி தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு 11 பேரையும் நியமிக்க சுகாதார அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

11 ஆண்டுகளுக்குப் பிறகு ஓடியோலஜி தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான இந்த ஆட்சேர்ப்பு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (அ)

# வல்வெட்டித்துறையில் இரத்த தான நிகழ்வு



வடமராட்சி, மே. 27

வல்வெட்டித்துறை இரத்த தானச் சங்கம் ஊடாக, 79ஆவது இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெற்றது.

இதில் 39 ஆண்களும் 12 பெண்களுமாக மொத்தம் 51 பேர் குருதிக் கொடை வழங்கியிருந்தனர்.

இதற்கான அனுசரணையை "வல்வை 1975 நட்புகள்" வழங்கி இருந்தனர். இந்த இரத்ததான நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் கலந்து கொண்டார். (அ-02)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் பாக்குத்தெண்டல் உற்சவம் நேற்று

முல்லைத்தீவு, மே 27

வரலாற்று சிறப்பு மிக்க, முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தின் ஆரம்ப நிகழ்வான பாக்குத்தெண்டல் உற்சவம் நேற்று அதிகாலை சிறப்பாக இடம்பெற்றது.

வருடாந்த பொங்கல் விழாவை தெரியப்படுத்தும் முகமாக, ஆலயத்துடன் தொடர்புடைய வீடுகளுக்கு சென்று தெரிவிக்கும் சம்பிரதாய உற்சவமாக, இது அமைந்துள்ளது.

நேற்று அதிகாலை 1.00 மணிக்கு அம்மன் சன்னிதானத்தில் இடம்பொற்ற பூசை வழிபாடுகள் தொடர்ந்து, பாக்குத் தொண்டலுக்கு, ஆலயத்துடன் தொடர்புடைய குறித்த வீடுகளுக்கு சென்ற குழுவினர், முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தை அடைந்ததும், அங்கு அம்மன் சந்நிதானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அந்தவகையில், எதிர்வரும் 2 ஆம் திகதி கடல்நீர் தீர்த்தம் எடுத்தல் உற்சவமும், தொடர்ந்து ஏழு நாட்கள் முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் அம்மன் சந்நிதானத்தில் உப்பு நீரில் விளக்கெரியும் அற்புத நிகழ்வு இடம்பெறவுள்ளது.

காட்டாவிநாயகர் ஆலய பொங்கல் உற்சவம், எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளதுடன், 9 ஆம் திகதி, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளது. (அ)

# அதிபர், ஆசிரியர் மீதான வாள்வெட்டு தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

திருக்கோவில், மே 27

அம்பாறை - ஆலையடி வேம்பு பிரதேசத்தில் அதிபர், ஆசிரியர்மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தை கண்டித்து நேற்றுத் திங்கட்கிழமை திருக்கோவில் பகுதியில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் ஆசிரியர் இருவர், க. பொ. த. சாதாரண தர மாணவர்களுக்கு செயலமர்வு ஒன்றை அறிவிக்க கடந்த வெள்ளிக்கிழமை தம்பட்டையைச் சேர்ந்த மாணவி ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்தனர்.

அப்போது, மதுபோதையில் இருந்த நபர் ஒருவர் அவர்களை வாளால் தாக்கியதோடு அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த வாள்வெட்டு சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்கள் நேற்று தம்பிலுவில் மகா வித்தியாலயத்துக்கு முன்னால் ஒன்றுகூடி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தொடர்நது, திருக்கோவில் மணிக்கூட்டு கோபுரம் வரை ஊர்வலமாக சென்று அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
27.05.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஐரோப்பிய தூதுக்குழுவின் வருகை

ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கொழும்பின் அதிகாரத்தை கைப்பற்றிய பின்னரான சூழலில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு முதன்முதலாக கொழும்பு வரவுள்ளது.

அநுர குமார அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவுள்ளதாக அறிவித்திருந்தது. எனினும், இதுவரையில் அதற்கான முன்னெடுப்புகள் உறுதியானவையாகத் தெரியவில்லை. கடந்த காலத்தில் இவ்வாறான தூதுக்குழுக்கள் வருவதும் – அரசாங்கம் வாக்குறுதிகளை வழங்குவதும் பின்னர் அனைத்தும் வழமைபோல் அனைத்தும் பூச்சியமாகுவதுமே இதுவரையான வரலாறு.

இந்தப் பின்னணியில், பொருளாதார நெருக்கடியின் பின்னரான சூழலில் இலங்கைமீது அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடிய வாய்ப்பு மேற்குலகுக்கு சற்று அதிகமாகவே காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடியை காரணமாகக் கொண்டு மனித உரிமைகள் சார்ந்த விடயங்களில் மேற்குலகம் கூடுதல் அழுத்தங்களை பிரயோகித்து பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையை இறங்கிவரச் செய்ய முடியும்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டிய இக்கட்டான நிலையிலிருக்கும் அநுர அரசாங்கம் அழுத்தங்களை சாதாரணமாக புறக்கணிக்க முடியாது. ஆனால், அது நிகழுமா என்பதுதான் கேள்வி. ஏனெனில், கடந்த பதினைந்து வருடகால மேற்குலக அழுத்தங்களை எடுத்து நோக்கினால் அவர்கள் கொழும்பை அரவணைத்துச் செல்லும் உபாயத்தை கைக்கொண்டிருந்தனவே தவிர, கொழும்பின் மீது கடும் அழுத்தங்களை பிரயோகிக்க முயற்சிக்கவில்லை.

பொறுப்புக்கூறல் விடயத்தில், நல்லாட்சியை பேணிப் பாதுகாக்கும் விடயத்தில் இந்த வாய்ப்பை விட்டால் வேறு உகந்த வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை. ஆனால், இலங்கைமீதான சர்வதேச ஈடுபாடோ அழுத்தங்கள் என்னும் வகைக்குள் அடங்கவில்லை என்பதுதான் உண்மையானது. இதனை தமிழ் அரசியல் கருத்துருவாக்கிகள் என்போர் சரியாக புரிந்து கொள்ளவில்லை.

நாடுகளின்மீதான அழுத்தம் என்பது, ஒரு குறிப்பிட்ட விடயத்தில் முன்னேற்றத்தைக் காணும் நோக்கில், குறித்த அரசாங்கத்தை இறங்கிவரச் செய்யும் நோக்கம் கொண்ட ஒரு நடவடிக்கையாகும். ஆனால், யுத்தததுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருட காலத்தில் இலங்கையின் ஆட்சியாளர்கள் அவர்களின் அடிப்படையான நிலைப்பாடுகளில் இருந்து இறங்கிவரவில்லை. அவ்வாறாயின் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது என்று எவ்வாறு நாம் வாதிட முடியும்? இலங்கையில் (வடக்கு, கிழக்கிலும்) இயங்கிவரும் அரசுசாரா நிறுவன சிவில் சமூக அமைப்புகள் என்போர், அரசுசாரா நிறுவன நிதிக்காக உருவாக்கிய ஒரு சொற்பிரயோகம்தான் சர்வதேச அழுத்தம் என்னும் சொல்லாக்கமாகும்.

இலங்கையுடனான நட்புறவின் அடிப்படையில் தங்களின் நலன்களை பேணிக்கொள்ளுதல் என்னும் அடிப்படையில்தான் வெளிநாடுகளின் அணுகுமுறை இருக்கின்றதே தவிர, இலங்கைமீதான அழுத்தமாக அவை இல்லை. அமெரிக்கா சிலரை தடைப் பட்டியலில் இட்டிருக்கின்றது என்பது உண்மைதான், கனடா முன்னாள் ஜனாதிபதிகளாக அண்ணன், தம்பி ராஜபக்ஷக்களை நாட்டுக்குள் நுழைய முடியாதவர்களாக தடை செய்திருப்பதும் உண்மைதான். ஆனால், இவ்வாறான தடைகளால் இலங்கை ஆட்சியாளர்களின் அடிப்படையான அரசியல் புரிதலிலோ, உள்ளக அரசியல் அணுகுமுறைகளிலோ எந்தவொரு முன்னேற்றகரமான மாற்றங்களும் நிகழவில்லையே ஏன்? ஏனெனில், அடிப்படையில் இவை எவையுமே இலங்கையின் மீதான தாக்கம் விளைவிக்கக்கூடிய அழுத்தங்களாக மாறவில்லை என்பதே உண்மையாகும்.

# சுகாதார அமைச்சுக்கு முன் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, மே 27

நிறைவுகாண் சுகாதார சேவகர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று சுகாதார அமைச்சுக்கு முன்பாக இடம் பெற்றது.

இதன்போது ஏராளமானவர்கள் கலந்து கொண்டதுடன், நோயாளர்களின் உயிர் ஆபத்தில், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அனுமதியுடனான பட்டப்படிப்பை மேற்கொண்டவர்களை மாத்திரம் அரச சேவையில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோஷங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களின் மத்தியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சானக்க சஞ்சீவ ,

சுகாதார பட்டத்தின் தரத்தை குறைக்கும் வகையிலான விடயம் முன்னெடுக்கப்படுகின்றது. புதிய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் குறித்த நிறைவுகாண் சுகாதார சேவைக்கு நுண்ணறிவு பரீட்சை ஊடாக ஆட்சேர்ப்பை மேற்கொள்ள எத்தனிக்கின்றனர். ஆனால் அந்த பரீட்சை மாத்திரம் போதாது. அரசாங்கம் நுண்ணறிவுப்பரீட்சையின் ஊடாக குறித்த வெற்றிடத்திற்கு நபர்களை இணைத்துக்கொள்ள எத்தனிக்கிறது.

அரசாங்கம் இந்த பிரச்சினைக்கான தீர்வு உரிய வகையில் வழங்கப்பட வேண்டும். அதனை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாத பட்சத்தில் வேலைநிறுத்த போராட்டத்தை முன்னெடுப்போம்-என்றார். (அ)

# "முக்கிய பதவிகளுக்கு தகுதியற்றோரை நியமிக்கும் செயல்பாட்டினை கைவிடுக"

கொழும்பு, மே 27

முக்கிய பதவிகளுக்காக தகுதியற்றவர்களை நியமிக்கும் செயல்பாட்டை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசங்கம் கைவிட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து நியமனங்களும் அரசியல் நலன் கருதியே வழங்கப்படுகின்றது.

ஜனாதிபதி வீண் உறுதிமொழிகளை மாத்திரம் வழங்க வல்லவர் என நாங்கள் கடந்த வருடம் நவம்பர் மாதமே கூறியிருந்தோம்.

அதனை தாண்டி அரசியல் ஞானம் மற்றும் கொள்கை வேலைத்திட்டம் என்பன அவரிடம் இல்லை.

இந்த விடயம் தற்போது கண் முன்பாக நிரூபமணமாகியுள்ளது.

காமினி விஜேசிங்க, சரத் மாயாதுன்னே ஆகியோர் தமக்கு விருப்பமான அரசியல் நிலைப்பாட்டை மனதில் வைத்து கணக்காய்வாளர் பதவிக்காக கடமைகளை உரிய வகையில் நிறைவேற்றியவர்கள் நாட்டின் அரச நிறுவனங்கள் உரிய வகையில் இயங்குவதற்கு தகுதி வாய்ந்தவர்கள் நியமிக்கப் பட வேண்டும்.

ஆந்த வகையில் கணக்காய்வாளர் நாயகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் ஆகியவற்றுக்கான பதவிகளுக்கு தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள்

கொழும்பு, மே 27

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேசிய மிருகக் காட்சிச்சாலை திணைக்கள பணிப்பாளர் நாயகம் சந்தன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இது குறித்து விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


ஏனைய நாடுகளைபோல சர்வதேச சுற்றாடல் தினத்தை நாமும் கொண்டாடுகிறோம். அதன் நிமித்தம் நமது நாட்டில் சுற்றாடல் வாரத்தை நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம்.

இம்மாதம் 30ஆம் திகதி முதல் ஜூன் 05 ஆம் திகதி வரை சுற்றாடல் வாரத்துக்கான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதன் பிரதான அங்கமாக இலங்கைக்கே உரித்தான சிறுத்தையை பின்னவல மிருகக்காட்சிச்சாலையில் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்த எதிர்பார்க்கிறோம். இதேபோல சிறுத்தைகளுக்கான பாதுகாப்பகம் ஒன்றை நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அங்கு பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டல்கள் முன்னடுககப்படும் -என்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**இடபம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்கு உள்ளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**மிதுனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். நவீன யுக்திகளை கையாளுவீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கடகம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதுஇடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிரச்னைகளுக்கு எதார்த்தமான முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையும் வீண் அலைச்சலும் இருக்கும். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**துலாம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. தாயார் ஆதரவாக பேசுவார். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமுக அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக் கட்டும். அரசால் ஆதாயம் உண்டு. வேற்றுமதத்தவர்கள் அறிமுகமாவார்கள். வெற்றி பெறும் நாள்.

**மீனம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். புது அத்தியாயம் தொடாங்கும் நாள்.

# இலங்கை சமூக பாதுகாப்பு சபையால் யாழில் மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

இலங்கை சமூக பாதுகாப்பு சபையால் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவனும் கலந்துகொண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களை வழங்கினர்.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய மாவட்ட பதில் செயலாளர், சமூகப் பாதுகாப்புச் சபையின் ஊடாக ஒய்வூதியத் திட்டத்தில் அதிகளவு பயனாளிகளை உள்வாங்கி யாழ். மாவட்டம் 11 தடவைகள் தேசிய விருதுக்கு தெரிவாகியுள்ளது எனவும் இதற்கு பிரதேச செயலர்களின் பங்களிப்பு முக்கியமான காரணம் எனவும் குறிப்பிட்டார்.


அத்துடன் பிரதம விருந்தினரான ஆளுநர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய போது அவர் எமது மாவட்டத்துக்கு மேற்கொண்டிருந்த அர்ப்பணிப்பான பணிகளில் சமூக பாதுகாப்பு சபையின் ஒய்வூதியத் திட்ட நடைமுறைப் படுத்தலும் ஒன்றாகும் எனக் குறிப்பிட்டதுடன் இவ்வாறான ஒருவர் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருப்பது சிறப்பானது எனவும் கூறினார்.


மேலும், தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 138 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது சிறப்பானது எனவும் இதனுள் 4 மாணவர்களுக்கு 50, 000 ரூபாயும் 3 மாணவர்களுக்கு 25, 000 ரூபாயும் ஏனையோருக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

பிரதம விருந்தினரான ஆளுநர் கருத்து தெரிவிக்கும் போது, மாணவர்களுக்கு கல்வியே உயர்ச்சியை வழங்கும் எனவும் அதனூடாகவே சிறந்த த லைமைத்துவம், பண்புகள், கீழ்படிவுள்ள சமுதாயத்தை தோற்றுவிக்க முடியும் எனவும் குறிப்பிட்டதுடன், புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். மேலும், இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சீரான வினைத்திறன் மிக்க செயல்பாட்டுக்கு தனது பாராட்டினையும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சமூக பாதுகாப்பு அதிகார சபையின் வடக்கு - கிழக்கு சிரேஷ்ட இணைப்பாளர் பா. பிரதீபன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் பிறட்லி ஜெராட், வலய கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலர்கள், மாவட்ட செயலகத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், லயன்ஸ் கழகத்தினர் தேசிய அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர், பாதுகாப்புச் சபையின் மாவட்ட இணைப்பதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(எ)





மன்னார் உயிலங்குளம் 542 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

# யாழில் அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்ட முன்னேற்றக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 27

அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களின் முன்னேற்றக் கூட்டமானது பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த 22 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பதில் அரசாங்க அதிபர், அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டத்துக்கு நன்றியைத் தெரிவிப்பதாகவும், குறைநிரப்பு வேலைகளை நிரப்புவதற்காகவே அரச சார்பற்ற நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், அரசசார்பற்ற நிறுவனங்களின் அரசாங்கத்தின் நடைமுறைகளுக்கு அமைவாக செயல்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளது எனவும் குறிப்பிட்டார். மேலும் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைப்பு முறையில் செயல்படுவதன் மூலம் வினைத்திறனாக செயல்பட முடியும் எனவும் தெரிவித்து, ஒவ்வொரு அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்களை ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

(எ)

# மாடுகள் கடத்திய ஐவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணத்தில் மாடுகள் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் ஐவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி ஏழு மாடுகளை வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்றபோது [illegible] நகர் பகுதியில் வைத்து இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விதான பத்திரணவின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசார தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை வேண்டும்!

## முனீர் முளப்பர் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்



கொழும்பு, மே. 27

ஞானசார தேரர் ஊடக சந்திப்பொன்றை நடத்தி எனக்கு எதிராக தெரிவித்துள்ள பொய்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விரிவான விசாரணை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்துள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த 20ஆம் திகதி கலகொட அத்தே ஞானசார தேரரினால் நடத்தப்பட்ட பொது பல சேனா ஊடக சந்திப்பின் போது முனீர் முளப்பர் ஆகிய என்னைப்பற்றி உண்மைக்கு புறம்பான அறிவிப்பொன்றை மேற்கொண்டு ஊடகங்கள் ஊடாக அவதூறு பரப்பி இருப்பது அவதானிக்கப் பட்டுள்ளது.

ஊடகங்களில் வெளியிடப்பட்ட அவமதிப்பு அறிக்கையின் பிரகாரம், நிட்டம்புவ திஹாரி பிரதேசத்தில் அமைந்துள்ள தன்வீர் நிறுவனம், ஜமாத்-இ-இஸ்லாம் மற்றும் இஹ்வான் முஸ்லிம் ஆகிய அமைப்புகளுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

அதேநேரம் கடவுளுக்காக மக்களைக் கொல்பவராகவோ அல்லது அதை ஆதரிப்பவராகவோ நான் ஒருபோதும் இருந்ததில்லை. மேலும் இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் நான் கடுமையாக மறுக்கிறேன்.

மேலே பெயர் குறிப்பிடப் பட்டுள்ள தேரரின் குற்றச்சாட்டின் உண்மை தன்மை குறித்து விரிவான மற்றும் வெளிப்படையான விசாரணையை நடத்தி, தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கவும், மக்கள் பிரதிநிதியான என்னைப் பற்றிய தவறான சித்தரிப்பை சமூகத்தில் ஏற்படுத்தி எனது நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தமைக்காக குறித்த தேரர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திஹாரி பிரதேசத்தில் இருக்கும் ஒரு கல்வி நிறுவனத்தின் பொறுப்புதாரி என தெரிவித்திருக்கிறார். நான் திஹாரி பிரதேசத்துக்கு குடிவந்து தற்போது 10 வருடங்கள் ஆகின்றன.

அதற்கு முன்பிருந்தே குறித்த கல்வி நிறுவனம் இருந்து வருகிறது. குறைந்தபட்சம் அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் இருப்பவர்களைக்கூட எனக்கு தெரியாது. அந்த தேரருக்கு தகவல் வழங்குபவர்கள் பிழையான தகவல்களை வழங்கி இருக்கிறார்கள்-என்றார். (அ)

# ஆறுமுகன் தொண்டமானின் நினைவுநாள் கொட்டகலையில்



கொழும்பு, மே. 27

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 5ஆவது ஆண்டு நினைவு நாள் கொட்டகலை சி.எல்.எப் வளாகத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது!

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 5ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கொட்டகலை சி.எல்.எப் வளாக ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் அன்னாரின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இப்பூசை வழிபாட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பாரியார் ராஜலக்ஷ்மி தொண்டமான், தவிசாளரும், நிதிச்செயலாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் உட்பட இ.தொ.கா உயர்பீட உறுப்பினர்கள் என பலர் கலந்துக் கொண்டனர். (அ)

# சுற்றுலாத்துறையை வீழ்த்த சமூக ஊடகங்கள் மூலம் சதி

## பிரதி அமைச்சர் நுவன் ரணசிங்க

கொழும்பு, மே.27

சுற்றுலாத்துறையை வீழ்ச்சியடைய செய்யும் நோக்கில் சமூக ஊடகங்களின் ஊடாக போலிப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுவதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் நுவன் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பிலிப்பைன்ஸ் நாட்டின் சுற்றுலாப் பயணியொருவர் தாக்கப்பட்டதான காணொளியொன்று சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இச்சம்பவமானது கடந்த 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெலிகம பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது. ஆனால் இந்த காணொளி இப்போதே வெளியாகியுள்ளது.

வங்குரோத்து நிலையிலிருந்து பொருளாதாரத்தை முன்னோக்கிய பாதைக்கு இட்டுச் செல்லும் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் அவற்றை குழப்பும் வகையிலேயே இந்த விடயம் மேற்கொள் ளப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என எவரேனும் நினைப்பார்க ளாயின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். -என்றார். (அ)

# மாலினி பொன்சேகாவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி அநுரகுமார இறுதி அஞ்சலி

கொழும்பு, மே. 27

மறைந்த பிரபல நடிகை மாலினி பொன்சேகாவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மாலினி பொன்சேகாவின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கனி மண்டபத்திற்கு நேற்று முன் தினம் மாலை சென்ற ஜனாதிபதி, பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தியதுடன், குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட சக கலைஞர்களுடன் சுமூகமாக உரையாடிய ஜனாதிபதி, இலங்கை சினிமாவின் ஒரு அடையாளமாகத் திகழ்ந்த பிரபல நடிகை மாலினி பொன் சேகாவின் மறைவுக்காக கலைத்துறையில் உள்ள அனைவருக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார். (அ)



# சர்வதேச லயன்ஸ் கழக தலைவர் ஜனாதிபதி அநுரவுடன் சந்திப்பு

கொழும்பு, மே. 27

இலங்கையிலுள்ள சிறுவர் மற்றும் இளைஞர் சமூகத்தினரின் உள ஆரோக்கியம் மற்றும் சமூக நலன்களுக்கு, சர்வதேச லயன்ஸ் கழகம் ஆதரவு வழங்கும் என சர்வதேச லயன்ஸ் கழகத்தின் தலைவர் பெப்ரிசியோ ஒலிவேரா தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பெப்ரிசியோ ஒலிவேரா இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் உணவுப் பாதுகாப்புத் திட்டங்கள், பல்வேறு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செயல்படுத்தப்படும் நிவாரணத் திட்டங்கள் மற்றும் கல்வித் திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதாகத் தலைவர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் உறுதியளித் தார்.



தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே மற்றும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் பிரதிநிதிகள் குழு ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# அரசின் இயலாமை வெளிப்படுகின்றது!

கொழும்பு, மே.27

பொய்யுரைத்து ஆட்சியை கைப்பற்றிய அரசாங்கத்தின் இயலாமை வெளிப்படுவதாக தென்மாகாண சபையின் முன்னாள் ஆளுனர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 8 மாத காலம் கடந்துள்ளது. ஆனால் குறுகிய காலப் பகுதிக்குள் மக்களின் நம்பிக்கையை இழந்த மற்றும் பொய்யுரைத்த அரசாங்கம் என்றால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தையே குறிப்பிட முடியும். மக்களை நாளுக்கு நாள் ஏமாற்றும் தரப்பினராக இந்த அரசாங்கம் உள்ளது.

அதன் பிரதிபலனே இந்த அரசாங்கத்திற்கு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. நாட்டு மக்கள் பாரிய அளவில் நம்பிக்கை வைத்துஇந்த பொய்யில் சிக்குண்டு மக்கள் பெரும் பாண்மை ஆணையை வழங்கினர்.

கடந்த அரசாங்கம் மேற்கொண்ட அனைத்து விடயங்களும் தவறு என கூறிய அரசாங்கம்தற்போது அவற்றை தொடர்ந்து கொண்டுள்ளது. -என்றார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, மே. 7

கொழும்பு - காலி பிரதான வீதியில் ரன்தொம்பே பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றுக்கு முன்பாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 01.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ரன்தொம்பே பிரதேசத்தில் உள்ள உணவகத்துக்கு முன்பாக சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது துப்பாக்கிதாரிகள், உணவக உரிமையாளரை தீவிரமாக கண்காணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கொலைக்களமாக மாறிவரும் தெற்கு!

### சர்வதேச ஊடகம் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, மே. 27

**இலங்கையின் தென் மற்றும் மேல் மாகாணங்கள் கொலைக்களமாக மாறி வருவதாக பி.பி.சி. அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.**

2022ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரை காலப்பகுதியில் பல கொலைகள் அரங்கேற்றப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 349 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்துள்ளதாகவும், அவற்றில் 238 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மேலும், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் கொலைகளும் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்திலும், தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலும் அடிக்கடி நடப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமீபத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு, காலி மாவட்டத்தின் அம்பலாங்கொடை மற்றும் அஹங்கல்ல பொலிஸ் பிரிவுகளில் நிலைமை மோசமாக இருப்பதாக பி.பி.சி அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## அரிசிக்கு தட்டுப்பாடு

கொழும்பு, மே. 27

மரதகஹமுல அரிசி மொத்த விற்பனை நிலையத்தில் சம்பா மற்றும் கீரிச் சம்பா அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக மரதகஹமுல அரிசி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் பி.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

சில வர்த்தகர்கள் அரிசியை பதுக்கி வைத்துள்ளமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, உப்பு தட்டுப்பாட்டிற்குத் தீர்வாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உப்பு விரைவில் நாட்டை வந்தடையும் எனத் தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## அனைத்து இராணுவ முகாம்களிலும் நேற்று முதல் நலன்புரி பிரிவு ஆரம்பம்

கொழும்பு, மே. 27

நாட்டின் அனைத்து இராணுவ முகாம்களிலும் நேற்று முதல் இராணுவ சிப்பாய்கள் நலன்புரி பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது என இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோவின் அறிவுறுத்தலுக்கமைய இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த சிப்பாய்கள் நலன்புரி பிரிவு அனைத்து இராணுவ முகாம்களிலும் உள்ள கட்டளை அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் செயற்படும்.

இதன்மூலம், ஓய்வுபெற்ற, அங்கவீனமுற்ற மற்றும் உயிரிழந்த இராணுவ சிப்பாய்களின் குடும்பங்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் எளிதாக்கப்படும் எனவும் இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

## முன்னர் பிளவுபட்டிருந்த கட்சிகள் அதிகார மோகத்தில் ஒன்றிணைவு!

### பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

கொழும்பு, மே. 27

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை கைப்பற்றுவதற்காக, முன்னதாக பிளவுபட்டிருந்த கட்சிகள் அதிகார மோகத்தில் தற்போது ஒன்றிணைந்து செயல்படுகின்றன என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் தெளிவானதோர் ஆணையை வழங்கியுள்ளனர் என்றும் அதற்கமைய நுவரெலியா மாவட்டத்தில் அதிகமான சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் எனவும் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார். (அ)

## சிறைக் கைதிகளைப் பராமரிக்க வருடாந்தம் ரூ.2,000 கோடி செலவு!

கொழும்பு, மே. 27

நாட்டின் சிறைச்சாலைகளில் கைதிகளைப் பராமரிப்பதற்காக ஆண்டு தோறும் சுமார் 20 பில்லியன் ரூபா (2,000 கோடி ரூபாய்) செலவிடப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் கூறுகிறது. இதில் சுமார் 7 பில்லியன் ரூபா (700 கோடி ரூபாய்) கைதிகளுக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்குவதற்காக செலவிடப்படுவதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டுகிறது.

திணைக்களத்திற்குச் சொந்தமான சிறைச்சாலைகளில் சுமார் 11,000 கைதிகளை அடைக்க முடியும் என்றும், தற்போது சுமார் 30,110 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களில் சுமார் 21,448 இற்கும் அதிகமானோர் விசாரணைக் கைதிகளாக உள்ளனர்.

இந்நிலையில், தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் எண்ணிக்கை 8,662 ஆகவுள்ளது. வெலிக்கடை சிறைச்சாலையில் சுமார் 1,500 கைதிகளை வைத்திருக்க முடியும். எனினும், தற்போது சுமார் 3,500 கைதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக்காட்டுகிறது. போதைப்பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளதாகவும், வழக்கு மற்றும் தடயவியல் அறிக்கைகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் தடுப்புக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இரு மாதங்களாக பணிப்பாளர் இல்லை

கொழும்பு, மே. 27

இலங்கையின் மிகப்பெரிய மருத்துவமனையான கொழும்பு தேசிய மருத்துவமனை கடந்த இரண்டு மாதங்களாக பணிப்பாளர் இல்லாமல் இயங்கி வருவதாக மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னர் இருந்த பணிப்பாளர் அமைச்சின் மேலதிக செயலாளராக பதவி உயர்வு பெற்ற பின்னர் சுகாதார அமைச்சுக்கு நியமிக்கப்பட்டதால் இரண்டு மாதங்களுக்கு முன்பு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு ஒரு பதில் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.

நிரந்தரப் பணிப்பாளர் இல்லாததால் மருத்துவமனையின் சில பிரிவுகளில் பிரச்னைகள் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனையில் சுமார் 1500 மருத்துவர்கள் மற்றும் 200 நிபுணர்கள் பணிபுரிவதாகவும், மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 25,000 என்றும் கூறப்படுகிறது. (அ)

## ரயில் சாரதிகள் பற்றாக்குறை!

### 15 ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, மே. 27



ரயில் சாரதிகள் பற்றாக் குறை காரணமாக நேற்றுக் காலை திட்டமிடப்பட்ட சுமார் 15 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ரயில் சாரதிகள் மருத்துவ விடுப்பு எடுத்ததால் இந்த நிலைமை ஏற்பட்டதாகவும், நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (அ)

## அதிக புகையை வெளியிடும் வாகனங்களுக்கு இனி சிக்கல்

கொழும்பு, மே. 27

அதிக புகையை வெளியிடும் வாகனங்களைக் கண்டறிந்து, குற்றவாளிகள் மீது முறையான நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்கள கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இதற்கமைய அதிக புகையை வெளியிடும் வாகனங்களைக் கண்டறிந்து, குற்றவாளிகள் மீது முறையான நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸ் சி.சி.ரி.வி கமராக்களைப் பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

வாகன புகை முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பொலிஸ் சி.சி.ரி.வி தரவுகளைப் பயன்படுத்துவதோடு,

சி.சி.ரி.வி கமரா அமைப்பை நவீனமயமாக்கவும் மேலும் விரிவுபடுத்தவும் இந்த நிதியம் முழு ஆதரவையும் வழங்கும் என்று மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார். (அ)

## வேகமாக பரவும் சிக்குன்குனியா; பிரித்தானியா பயண எச்சரிக்கை

கொழும்பு, மே. 27

இலங்கையில் சிக்குன்குனியா நோய் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், பிரித்தானியா அரசாங்கம் தமது நாட்டு பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, இலங்கை செல்லும் பிரித்தானிய பிரஜைகள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அந்நாட்டு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

மே 23ஆம் திகதி தனது பயண எச்சரிக்கையை புதுப்பித்துள்ள பிரித்தானியா அரசாங்கம் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, நாட்டில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த 20 ஆண்டுகளில் பதிவாகாத அளவில் இலங்கையில் தற்போது குறிப்பிடத்தக்க அளவில் சிக்குன்குனியா நோய் பரவல் அதிகரித்துள்ளதாக வைரஸ் தொடர்பான மருத்துவ நிபுணர் நீலிகா மாலவிகே தெரிவித்துள்ளார்.

எக்ஸ் பதிவொன்றின் ஊடாக இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், இந்த நோய் பரவலுக்குக் காரணமான வைரஸ் திரிபுகள் குறித்து தமது குழுவினர் முழு மரபணு பரிசோதனை நடத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் அணியின் பதவி விலகலுக்கு தேர்தல் முறையே பிரதான காரணம்!

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 27

**ஐக்கிய மக்கள் சக்தி தொகுதி அமைப்பாளர்களின் விலகலுக்கு தேர்தல் முறைமையே பிரதான காரணம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பட்டியல் மூலம் கட்சிக்குக் கிடைக்கப் பெற்ற ஆசனங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாகவே ஒரு சில தொகுதி அமைப்பாளர்கள் பதவி விலகத் தீர்மானித்துள்ளனர்.

தொகுதியில் அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட முதல் இரண்டு பேரைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கட்சி தொகுதி அமைப்பாளர்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருந்தது.

அதேபோன்று பெண்களை நியமிப்பது தொடர்பாகவும் சில அளவுகோள்களை வழங்கி இருந்தது. அதன் பிரகாரம் அதிகமான இடங்களில் கட்சி அவ்வாறு செயற்பட்டிருந்தது.

ஜனநாயகம் என்பது மக்களால் அதிகம் விரும்பப்படுகின்றவர்களைத் தெரிவு செய்வதாகும். என்றாலும் இந்தத் தேர்தல் முறைமையை 100 வீதம் பின்பற்றும்போது தொதி அமைப்பாளர்கள் பல்வேறு நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

தொகுதி அமைப்பாளர் என்ற வகையில் அந்தப் பிரச்னையை நானும் எதிர்கொள்கின்றேன். இந்தத் தேர்தல் முறைமையால் எனக்கு விருப்பமான, வினைத்திறன் மிக்க பலரைத் தெரிவு செய்துகொள்ள முடியாமல் போயிருக்கின்றது.

தேர்தல் ஒன்று முடிவடைந்த பின்னர் தேசியப்பட்டியல் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்போது இவ்வாறான பிரச்னைகள் ஏற்படுவது சாதாரணமானதாகும்.

அதனால் பதவி விலகத் தீர்மானித்திருக்கும் தொகுதி அமைப்பாளர்கள் இந்த நேரத்தில் சற்றுப் பொறுமையாக இருக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்து. அவர்கள் இந்தக் கட்சிக்காக ஆரம்ப காலத்தில் இருந்து பாடுபட்டவர்கள்.

தேர்தல் சட்டத்தில் இருக்கும் பிழையான நடவடிக்கையே இதற்குக் காரணமாகும். அதனால் இது கட்சியின் தவறு அல்ல. தொகுதி அமைப்பாளர்களின் மன ஆதங்கமும் நியாயமானதாகும்.

எனவே, தொகுதி அமைப்பாளர்களின் பதவி விலகல், அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட கோபத்தில் எடுத்த தீர்மானமாகும். அது ஒருசில நாட்களில் சரியாகும். அதனால் அது தொடர்பில் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை-என்றார். (அ)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை நாட்டில் 22 ஆயிரத்தை கடந்தது!

## 42 பிரிவுகளில் அதி உயர் டெங்கு அபாயம்

கொழும்பு, மே. 27

டெங்கு பரவலின் அதிகரிப்போடு 42 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதி உயர் டெங்கு அபாயம் மிக்க பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் நாட்டில் கண்டறியப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் 22 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 22,248 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இம்மாதத்தில் கடந்த சனிக்கிழமை வரை சுமார் 4702 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இதேவேளை ஜனவரி மாதம் 4936 நோயாளர்களும், பெப்ரவரி மாதம் 3665 நோயாளர்களும், மார்ச் மாதம் 3770 நோயாளர்களும், ஏப்ரல் மாதம் 5175 டெங்கு நோயாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர்.

தொடரும் மழையுடனான வானிலை காரணமாக கொழும்பு, கொழும்பு மாநகர சபை, கம்பஹா, இரத்தினபுரி, கண்டி, , மட்டக்களப்பு, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. டெங்கு பரவலை கருத்தில் கொண்டு 42 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதி உயர் டெங்கு அபாயம் மிக்க பகுதிகளாக அடையாளப்ப டுத்தப்பட்டுள்ளன. டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 11 ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 45.4 வீதமானவர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர். இரண்டு நாட்களுக்கு மேல் கடுமையான காய்ச்சல் நீடிக்கும் பட்சத்தில் வைத்தியசாலையை நாடுவது நல்லது. கர்ப்பிணித் தாய்மார், சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் காய்ச்சல் நிலவுமாயின் உடனடியாக வைத்தியசாலையை நாடுமாறு வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# சுற்றுலாத்துறை தொடர்பில் பரவும் போலிச் செய்திகள்!

கொழும்பு, மே. 27

இலங்கையின் சுற்றுலாத்துறையை குறிவைத்து பல்வேறு போலிச் செய்திகள் மூலம் அரசாங்கத்தின் பெயருக்கு களங்கத்தை விளைவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வெலிகம மற்றும் அறுகம்பை பகுதிகள் சம்பந்தப்பட்ட இரண்டு குறிப்பிட்ட சம்பவங்கள் மூலம் இது தெளிவாகிறது.

முதல் சம்பவம் வெலிகமவில் பிலிப்பைன்ஸ் நாட்டவர் ஒருவர் தாக்கப்படும் வீடியோவாகும்.

விசாரணையில் இது 2024 ஆம் ஆண்டு நடந்த ஒரு சம்பவம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, அறுகம்பைப் பகுதியில் பொது இடங்களில் சுற்றுலாப் பயணிகள் பிகினி அணிவதைத் தவிர்க்குமாறுஅறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது அப்பகுதியில் இனப் பதற்றத்தை ஏற்படுத்தும் முயற் சியாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை உட்பட முக்கிய உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்க முஸ்லிம் சமூகத்துடன் அரசாங்கம் இணைந்து செயல்பட்டு வரும் நேரத்தில், அறுகம்பை குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இனப் பதற்றங்களை ஏற்படுத்தவும், தேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான அதன் முயற்சிகளை நாசப்படுத்தவும் சிலர் மேற்கொண்ட முயற்சிகளாக அரசாங்கம் இந்த சம்பவங்களைக் கருதுகிறது.

சுற்றுலாத் துறையை குறிவைத்து பொருளாதாரத்துக்கு தீங்கு விளைவிக்க முயற்சிக்கும் எந்தவொரு நபருக்கோ அல்லது குழுவுக்கோ எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுபோன்ற போலிச் செய்திகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம்-என்றார். (அ)

# 512 பேர் கைது!

கொழும்பு, மே. 27

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் நேற்று முன்தினம் மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றிவ ளைப்பு நடவடிக்கையின்போது போதைப்பொருட்களுடன் 512 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 144 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 179 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 175 பேரும், போதை மாத்திரைகளுடன் 14 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 154 கிராம் 326 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 261 கிராம் 542 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 08 கிலோ 762 கிராம் 844 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும், 962 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# தேங்காயின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, மே. 27

நாட்டில் நிலவும் உப்பு பற்றாக்குறைக்கு மத்தியில் தற்போது தேங்காயின் விலையும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் முன்னணி தெரிவித்துள்ளது.

இதன்படி, தேங்காய் ஒன்று 200 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுவதாக அந்த முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அவர், தற்போது சந்தையில் 245 ரூபாய் முதல் 250 ரூபாய் வரையில் தேங்காய் விற்பனை செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டர். (அ)

# குரங்கு கணக்கெடுப்பு அறிக்கையில் தாமதம்

கொழும்பு, மே. 27

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட, குரங்கினக் கணக்கெடுப்பின் இறுதி அறிவிப்பு தாமதமாகி வருகிறது.

தரவு சேகரிப்பு மற்றும் சரிபார்ப்பில் ஏற்பட்ட பிரச்னைகளே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இறுதி புள்ளிவிவரங்களின் நம்பகத்தன்மை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

முன்னதாக, குறித்த கணக்கெடுப்பின் வரைவு அறிக்கை, 2025 மார்ச் 28 அன்று விவசாய அமைச்சிடம் ஒப்படைக்கப்படவிருந்தது.

இந்தநிலையில், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இறுதி முடிவுகள் அறிவிக்கப்படலாம் என்ற எதிர்ப்பார்ப்பும் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# வயம்ப தேசிய கல்விக் கல்லூரி மாணவி மரணம் குறித்து விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, மே. 27

பிங்கிரியவில் அமைந்துள்ள வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் மாணவர் ஒருவர் உயிரிழந்தது குறித்து இலங்கை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இரண்டாம் ஆண்டு மாணவி கடந்த வெள்ளிக்கிழமை மாலை கல்லூரியில் உள்ள தனது விடுதிக்குள் தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மரணம் தொடர்பாக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பலரிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

சனிக்கிழமை நீதிமன்றத்தில் உண்மைகளை சமர்ப்பித்த பிறகு, நீதிவான் விசாரணை நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், கல்லூரியின் மாணவர்கள் குழு ஒன்று கல்லூரி நிர்வாகத்துக்கு எதிராக மௌனப் போராட்டம் நடத்தியதாகவும், மாணவியின் மரணத்துக்கு கல்லூரி ஆசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்லூரியில் சில விரிவுரையாளர்களின் துன்புறுத்தலால் ஏற்பட்ட மன உளைச்சலை மாணவியால் தாங்க முடியாமல் போனதாகவும், இதனால் தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கு வந்ததாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர். (அ)

# போதைப்பொருளுடன் மூவர் கைது!

கொழும்பு, மே. 27

கல்கிஸை பிரதேசத்தில் 3 இடங்களை இலக்கு வைத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஹெரோயின் போதைப்பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை, ஜபோஸ்லேன் பிரதேசத்தில் 10 கிராம் 400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ராஹூல வீதி பகுதியில் 5 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இரத்மலானை ரயில் நிலையத்துக்கு அருகில் 5 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நலையில், மொறட்டுவை , இரத்மலானை மற்றும் கல்கிஸை பகுதிகளைச் சேர்ந்த 32,39,மற்றும் 54 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் காணிகளை விடுவித்தால் நெல் உற்பத்தி 5 இலட்சம் தொன் உயரும்!

## குகதாசன் எம். பி. சுட்டிக்காட்டு

திருகோணமலை, மே 27

**திருகோணமலையில் காணிகளை விடுவிப்பதன் மூலம் நாட்டின் நெல் உற்பத்தியை வருடத்தில் 5 இலட்சம் மெற்றிக் தொன்னாக அதிகரிக்கலாம். எனவே, நாட்டின் - விவசாயிகளின் நன்மை கருதி அரசாங்கம் கையகப்படுத்திய காணிகளை விடுவிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் ச. குகதாஸன் தெரிவித்துள்ளார்.**

திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காணி அபகரிப்பு தொடர்பிலான இரு குறுந்திரைப்படங்கள் வெளியீட்டு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், காணிகள் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் பிரதமர் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. நானும் கலந்துகொண்டேன். வடக்கு மாகாணத்தை மையப்படுத்தி கலந்துரையாடல் நடைபெற்றாலும் கிழக்கு மாகாணத்தை பற்றி பேசப்படவில்லை. இருந்தபோதிலும் திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் காணி பிரச்னைகள் தொடர்பில் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளேன். நானும் ஒரு விவசாயி என்ற அடிப்படையில் எனது வயல் நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. எனவே, இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி மக்களின் காணிப் பிரச்னைகளை தீர்க்க இயலுமான முயற்சிகளை மேற்கொள்வேன்.

*3 இலட்சத்து 16 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவித்து விவசாயிகளின் துன்பத்தை துடைக்க வேண்டும். 5 இலட்சம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிக்கவேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறேன் - என்றார்.*

(ஐ)

# மனித பாவனைக்குதவாத உணவுப்பொருட்கள் மீட்பு

## உணவக உரிமையாளர் மீது வழக்கு தாக்கல்

மட்டக்களப்பு, மே 27


மட்டக்களப்பு நகரில் சட்டத்தரணிகள் சிலர் பகல் உணவுக்காக பிரபல உணவகம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்த உணவு பொதிக்குள் புழுக்கள் தென்பட்டதை அடுத்து பொதுச்சுகாதார பரிசோதகர்கள் குறித்த உணவகத்தை சுற்றி வளைத்தனர்.

சட்டத்தரணிகளிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து குறித்த உணவகம் சுற்றி வளைக்கப்பட்டு அங்கிருந்து மனித பாவனைக்குதவாத பெருமளவிலான சமைத்த உணவுப் பொருட்கள் பொதுச்சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு புளியந்தீவு பதில் பொதுச் சுகாதார பரிசோதகர் ரி. மிதுன்ராஜ் தெரிவித்தார்.

குறித்த உணவுப் பொதியை பிரித்து சாப்பிட முற்பட்ட போது அதற்குள் இருந்து புழுக்கள் வெளியாகின. இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். முரளீஸ்வரனின் பணிப்பின் பேரில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி உதயகுமாரின் உத்தரவில் குறித்த உணவகம் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் சோதனையிடப்பட்டது.

இந்த நிலையில் உணவக உரிமையாளர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் அங்கிருந்து பெருமளவான சமைத்த உணவுப் பொருட்கள் சுகாதார அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

(எ)



# திருகோணமலை நிலாவெளி கடற்கரையில் சிரமதானம்

திருகோணமலை, மே 27

நிலாவெளி பிரதேச சுற்றுலா கடற்கரையில் நேற்று சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டம் ஹோட்டல் சங்கத்துடன் கிராம மக்களும் கிராம அபிவிருத்திச் சங்க பெருங்கடல் மீனவர் சங்கம், நன்னீர் கலப்பு சங்கம் மற்றும் நிலாவெளி உல்லாச பிரயாணிகள் படகு சங்கம் உள்ளிட்ட பல அமைப்பினர் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் நிலாவெளி சுற்றுலாத் தலத்தின் வளர்ச்சியை அதிகப்படுத்தவும் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

(எ)

# நிந்தவூர் பிரதேசத்தில் விசேட டெங்கு தடுப்பு நடவடிக்கைகள்

கல்முனை, மே 27

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் விசேட டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கு அமைய நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், நிந்தவூர் மஸ்லம் வித்தியாலயத்துடன் இணைந்து ஏற்பாடு செய்து டெங்கு நோய் தடுப்பு செயல் திட்டம் நேற்றுக்காலை சுற்று வட்டாரத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, டெங்கு நுளம்புகள் அற்ற பாதுகாப்பான பிரதேசமாக பாடசாலை சுற்றுச்சூழலை மாற்றியமைக்கும் நோக்குடன் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பாடசாலை



சூழலில் உள்ள வீடுகளுக்கு தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டு அழித்தொழிக்கப்பட்டதுடன் டெங்கு நுளம்பு குடம்பிகள் பெருகும் வகையில் சுற்றாடலை பாதுகாப்பற்ற முறையில் வைத்திருந்தவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (எ-01)

# ஆட்சி அமைப்பது தொடர்பில் கருத்தறியும் கலந்துரையாடல்

பொத்துவில், மே 27

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர், இறக்காமம், பொத்துவில் ஆகிய பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் கருத்தறியும் கலந்துரையாடல் புணானை ஐ.சி.எஸ்.டி. வளாகத்தில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இறக்காமம், வரிப்பத்தான் சேனை, பொத்துவில் மத்திய குழுக்களுடனான இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான நிசாம் காரியப்பர், எம். ஹிஸ்புல்லாஹ், எஸ் உதுமாலெப்பை, கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-06)

# "உகந்தைமலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை அகற்றப்பட வேண்டும்"

காரைதீவு, மே 27

உகந்தைமலை கடற்கரையிலுள்ள மலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை உடன் அகற்றப்பட வேண்டும் என்று அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகர் தா. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

தமிழர் பாரம்பரிய வரலாற்று ஆதாரங்களுடன் காணப்படும் பூர்வீகங்களை அழித்தலுடன் தொடரும் ஆக்கிரமிப்புகள் யாவும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தராக ஜுனைதீன்



ஒலுவில், மே 27

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் எம். ஜுனைதீன் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.


தென்கிழக்கு பல்கலைக்கழக துணை வேந்தரின் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில் கடந்த ஒகஸ்ட் 8ஆம் திகதி முதல் துணைவேந்தர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

இந்த நிலையில் பேரவையின் பரிந்துரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதன்படி ஜனாதிபதியால் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி ஜுனைதீன் துணைவேந்தராக நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

(எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் கனமழை 20 பேர் உயிரிழந்தனர்!



இஸ்லாமாபாத், மே 27

**பாகிஸ்தானில் இடி - மின்னலுடன் கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால், ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர்.**

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அங்கு இடி - மின்னலுடன் கனமழை வெளுத்து வாங்கியது. மேலும், பலத்த காற்றுடன் பெய்த கன மழை காரணமாக இஸ்லாமாபாத்தில் தாழ்வான பகுதிகளில் வெள்ளம்பெருக்கெடுத்து ஓடியது.

மேலும் லாகூர், ஷேகுபுரா, நங்கனா சாஹிப், அட்டாக், முல்தான், ராஜன்பூர், ஹபிசாபாத், மியான்வாலி, ஜாங் குஜ்ரன்வாலா, லாயா உள்ளிட்ட நகரங்களில் கனமழை காரணமாக வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால், வாகனங்கள் வீதிகளில் ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டது. சூறைக்காற்று காரணமாக வீட்டின் மேற்கூரைகள், மின்சார கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன. இதனால், மின்சார விநியோகம் தடைப்பட்டது. மேலும், சுமார் 20 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் நீரில் மூழ்கின.

பாகிஸ்தானில் கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, ராட்சத விளம்பர பலகைகள் விழுந்தது உள்ளிட்டவற்றால் பெண்கள் உட்பட 20 பேர் உயிரிழந்தனர். 150இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

## 13 பேர் உயிரிழப்பு

கீவ், மே 27

உக்ரைன் மீது ரஷ்யா ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில் 13 பேர் பலியாகினர்.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று ஆயிரத்து 187ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அது தோல்வியில் முடிந்தது. இதேபோன்று, போர் நிறுத்தம் தொடர்பில் ரஷ்யாவும் உக்ரைனும் நேரடி பேச்சுக்கள் நடத்தின. ஆனால் அந்த பேச்சுக்கள் தோல்வியடைந்தன. இதனால் போர் நீடித்து வருகிறது.

இந்த நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா நேற்று ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. 266 ட்ரோன்கள், 45 ஏவுகணைகள் மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். (எ)

# மீண்டும் போராட்டம் வெடிக்கும் சூழல் பங்களாதேஷில் பதற்றம் அதிகரிப்பு

டாக்கா, மே 27

பங்களாதேஷில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் எதிர்க்கட்சிகளுக்கு அந்த நாட்டு இடைக்கால அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பங்களாதேஷில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மாணவர்கள் போராட்டத்தால் பிரதமர் பதவியிலிருந்து விலகிய ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதையடுத்து அங்கு முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது.

இந்தச் சூழலில் தற்போது பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்று இராணுவத் தளபதி மற்றும் பங்களாதேஷ் தேசியவாத கட்சி அழுத்தம் கொடுத்து வருகிறது. இதில் தேசியவாத கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கிடையே முகமது யூனுஸ் இராஜினாமா செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், அதை அவரது உதவியாளர் மறுத்திருந்தார்.

இந்த நிலையில் அங்கு நிலவும் பதற்றங்களுக்கு மத்தியில் பங்களாதேஷ் தேசியவாத கட்சிக்கு, இடைக்கால அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. இடைக்கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகரான முகமது யூனுஸ் மற்றும் அவரது உதவியாளர்கள் ஆகியோர் நியாயமற்ற கோரிக்கைகள் மூலம் தங்கள் மீது அழுத்தம் கொடுத்தால் பொதுமக்களின் ஆதரவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் தலைமை ஆலோசகர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், அரசாங்கத்தின் சுயாட்சி, சீர்திருத்த முயற்சிகள், நீதித்துறை செயல்முறைகள், சுதந்திரமான மற்றும் அல்லது இயல்பான செயல்பாடுகளைத் தடுத்தால் அரசாங்கம் மக்களுடன் கலந்தாலோசித்து தேவையான முடிவுகளை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# புடினை ட்ரோன் தாக்குதலில் கொல்ல உக்ரைன் முயற்சி

மொஸ்கோ, மே 27



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குர்ஸ்க் ஒபிளாஸ்ட் என்ற பகுதிக்கு ஹெலிகொப்டரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது, உக்ரைனின் ஆளில்லா விமானம் ஒன்று புடின் பயணித்த ஹெலிகொப்டரை தாக்கியது என்று ரஷ்யாவிலிருந்து வெளிவரும் ஆர். பி. சி. என்ற செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலில், ரஷ்ய வான் பாதுகாப்பு மண்டல தளபதியான யூரி டாஷ்கின் கூறுகையில், புடினின் வான்வெளி பயணம் சீராக இருக்கும் வகையில், அதனை பாதுகாத்ததுடன், ட்ரோன் தாக்குதலுக்கு எதிராக ரஷ்ய படைகள் செயல்பட்டன என கூறினார்.

நாங்கள் உடனடியாக வான் பாதுகாப்புக்கான போரில் ஈடுபட்டோம். தொடர்ந்து போரிட்டு அதனை முறியடித்து வெற்றி பெற்றோம். புடினின் பயணத்துக்கான வான்வெளி பாதுகாப்பையும் உறுதி செய்தோம். ட்ரோன் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், புடின் பயணித்த ஹெலிகொப்டர் திறம்பட செயல்பட்டது- என்றார்.

இந்தத் தாக்குதல் பற்றி உக்ரைன் தரப்பிலிருந்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. (எ)

# அமெ. ஏவுகணை தொழில்நுட்பத்தை ரஷ்யா திருடியது



வாஷிங்டன், மே 27

ஒபாமா ஆட்சிக் காலத்தில் அமெரிக்க ஏவுகணை தொழில்நுட்பத்தை ரஷ்யா திருடியது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டினார்.

இராணுவ அகடமியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பட்டம் வழங்கும் நிகழ்ச்சியில் ட்ரம்ப் பங்கேற்றார். அப்போது அவர் கூறுகையில், உலகம் இது வரை கண்டிராத மிகப்பெரிய மற்றும் மிகவும் சக்திவாய்ந்த இராணுவத்தின் அதிகாரிகளாக நீங்கள் உள்ளீர்கள். ஏனென்றால் நான் அந்த இராணுவத்தை மீண்டும் கட்டியெழுப்பினேன். நாங்கள் கவனச்சிதறல்களிலிருந்து விடுபட்டு, அமெரிக்காவின் எதிரிகளை நசுக்குவது, மற்றும் நமது சிறந்த அமெரிக்கக் கொடியை பாதுகாப்பது போன்ற அதன் முக்கிய பணியில் நமது இராணுவத்தை கவனம் செலுத்த வைக்கிறோம்.

இராணுவம் தனது தொலை நோக்கு எதிரிகளைத் தோற்கடிப்பதிலும் அமெரிக்க மதிப்புகளைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகிறது. இன்று பட்டம் பெற்றவர்கள் தங்களது சொந்த ஹைப்பர் சோனிக் ஏவுகணையை வடிவமைக்கும் சவாலை ஏற்றுக் கொண்டுள்ளனர். நாம் அவற்றை உருவாக்குகிறோம். ஆனால் இதற்கு முன்பு ஒபாமா ஆட்சி நிர்வாகத்தின் கீழ் அமெரிக்க ஏவுகணை தொழில்நுட்பத்தை ரஷ்யா திருடியது என்றார்.

# இந்தியாவின் முதல் எதிரி சீனா

## அமெரிக்க புலனாய்வு அமைப்பு

வாஷிங்டன், மே 27

இந்தியா, சீனாவைத்தான் தனது முதல் எதிரியாக கருதுவதாக அமெரிக்க புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகியவை இந்தியாவுக்கு எப்போதுமே போட்டி நாடுகளாக உள்ளன. இவ்விரு நாடுகளின் எல்லைகளில் இந்தியாவுக்கு பதற்றமான சூழலே நிலவுகிறது.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் மூண்டபோது, இரு நாடுகளும் மோதலை நிறுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டபோதிலும் சீனா பாகிஸ்தாக்கே ஆதரவு தெரிவித்தது.

இந்தச் சூழலில் இந்தியா, சீனாவைத்தான் தனது முதல் எதிரியாக கருதுவதாக அமெரிக்க புலனாய்வு அமைப்பான டி.ஐ.ஏ. நடப்பு ஆண்டுக்கான உலகளாவிய அச்சுறுத்தல் பற்றிய தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேநேரத்தில் பாகிஸ்தானை நிர்வகிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு பிரச்னையாக இந்தியா கருதுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அபாயகரமான இரசாயனங்களுடன் சரக்கு கப்பல் கடலில் மூழ்கியது



திருவனந்தபுரம், மே 27

அபாயகரமான இரசாயனங்களை ஏற்றிச் சென்ற சரக்கு கப்பல் இந்தியாவின் கேரள கடல் பகுதியில் மூழ்கியது. அந்தக் கப்பலை இயக்கிய மாலுமிகள் உட்பட 24 பணியாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

கேரளாவின் விழிஞ்சம் துறைமுகத்திலிருந்து லைபீரியாவை சேர்ந்த சரக்கு கப்பல் கொச்சி துறைமுகத்துக்கு புறப்பட்டது. இந்தக் கப்பலில் 100 கன்டெய்னர்கள் இருந்தன. இதில் 13 கன்டெய்னர்களில் அபாயகரமான இரசாயனங்களும் 12 கன்டெய்னர்களில் கல்சியம் கார்பைடும் இருந்தது. மேலும் 84. 44 மெற்ரிக் தொன் டீசல் உள்ளிட்ட எரிபொருட்களும் கப்பலில் கொண்டு செல்லப்பட்டன.

இந்த சரக்கு கப்பல் நேற்று முன்தினம் கொச்சியிலிருந்து 38 கடல் மைல் தொலைவில் இருந்தது. அப்போது கப்பல் ஒருபக்கமாக சாயத் தொடங்கியது. இதுகுறித்து தகவல் அறிந்தவுடன் இந்திய கடலோர காவல் படை மற்றும் கடற்படையை சேர்ந்தவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கப்பலில் பணியாற்றிய 21 பேர் படகுகள் மூலம் மீட்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அசத்தல் வெற்றி

அகமதாபாத், மே 27

குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணி அபார வெற்றி பெற்றது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் 2 லீக் ஆட்டங்கள் நடைபெற்றன. இதன்படி முதலாவதாக அகமதாபாத்தில் நடைபெற்ற 67ஆவது லீக் ஆட்டத்தில் குஜராத் - சென்னை அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இதன்படி சென்னை அணியின் சார்பில் முதலாவதாக ஆயூஷ் மாத்ரே மற்றும் டெவான் கொன்வே ஆகியோர் களமிறங்கினர்.

இந்த ஜோடியில் ஆயூஷ் மாத்ரே, குஜராத் அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தார். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது. இந்த சூழலில் ஆயூஷ் மாத்ரே 34 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய உர்வில் பட்டேலும் அதிரடியில் இறங்கினார். அவர் 19 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ஷிவம் துபே 17 ஓட்டங்களில் வெளியேறினார்.

மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கொன்வே, தனது அரைச் சதத்தை பதிவு செய்திருந்த நிலையில் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்ததாக பிராவிஸுடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்து மிரட்டிய இந்த ஜோடியில் பிராவிஸ் 19 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார். கடைசி ஓவரில் பிராவிஸ் 57 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார்.

ஜடேஜா 21 ஓட்டங்கள் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 230 ஓட்டங்கள் எடுத்தது. குஜராத் அணியின் சார்பில் அதிகபட்சமாக பிரசித் கிருஷ்ணா 2 விக்கெட்களும் சாய் கிஷோர், ரஷித் கான், ஷாருக் கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.



இதனைத்தொடர்ந்து 231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணியின் சார்பில் சுப்மன் கில் மற்றும் சாய் சுதர்சன் ஆகியோர் களமிறங்கினர். அதிரடியாக தொடங்கிய இந்த ஜோடியில் சுப்மன் கில் 13 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, அவரைத்தொடர்ந்து களமிறங்கிய ஜோஸ் பட்லர் 5 ஓட்டங்களும் ரூதர் போர்ட் ஓட்டமின்றியும் வெளியேறினர். ஷாருக்கான் 19 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்கள் சேர்த்துக்கொண்டிருந்த சாய் சுதர்ஷன் 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரைத்தொடர்ந்து களமிறங்கிய ரஷித் கான் 12, கோட்சி 5, ராகுல் தெவாட்டியா 14, அர்ஷத் கான் 20, சாய் கிஷோர் 3 ஓட்டங்களும் எடுத்து சீரான இடைவெளியில் ஆட்டமிழந்தனர்.

முடிவில் முகமது சிராஜ் 3 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இறுதியில் குஜராத் அணி 18. 3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 147 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

சென்னை அணியின் சார்பில் அதிகபட்சமாக கம்போஜ் மற்றும் நூர் அகமது ஆகியோர் தலா 3 விக்கெட்களும் ஜடேஜா 2 விக்கெட்களும் கலில் அகமது மற்றும் பத்திரண ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதன்மூலம் குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணி அபார வெற்றி பெற்றது.

(எ)

## பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் அரினா சபலெங்கா வெற்றி

பாரிஸ், மே 27

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் அரினா சபலெங்கா அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நேற்று முன்தினம் கோலாகலமாக தொடங்கியது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவில் நம்பர் 1 வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா, ரஷ்யாவின் கமிலா ரகிமோவாவுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் முழுவதுமாக ஆதிக்கம் செலுத்திய சபலெங்கா 6-1 மற்றும் 6-0 என்ற நேர் செற் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

(எ)



## கொல்கத்தாவை வீழ்த்தி ஹைதராபாத் வெற்றி

புதுடில்லி, மே 27

கொல்கத்தாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் நிறைவு செய்தது ஹைதராபாத் அணி.

ஐ.பி.எல். தொடரில் டில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 68ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. ஏற்கனவே பிளே ஒப் சுற்று வாய்ப்பை இழந்து விட்ட இந்த இரு அணிகளுக்கும் இது கடைசி ஆட்டமாகும்.


இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் கள் இழப்புக்கு 278 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ஹென்றி கிளாசென் 105 ஓட்டங்களும் டிராவிஸ் ஹெட் 76 ஓட்டங்களும் குவித்தனர். கொல்கத்தா தரப்பில் அதிகபட்சமாக சுனில் நரைன் 2 விக்கெட்கள் கைப்பற்றினார்.

இதையடுத்து 279 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய கொல்கத்தா அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்து தடுமாறியது. தொடக்க ஆட்டக்காரர்களான சுனில் நரைன் 31 ஓட்டங்களிலும் டி கொக் 9 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

கொல்கத்தா வீரர்கள் அதிரடியாக விளையாட வேண்டும் என்ற அவசரகதியில் விக்கெட்களை தாரை வார்த்தனர். ரஹானே 15 ஓட்டங்களிலும் ரகுவன்ஷி 9 ஓட்டங்களிலும் ரஸல் ஓட்டமின்றியும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். இறுதிக் கட்டத்தில் மணிஷ் பாண்டே 37 ஓட்டங்கள் மற்றும் ஹர்ஷித் ராணா 34 ஓட்டங்கள் எடுத்து பொறுப்புடன் விளையாடி அணியை கௌரவ நிலைக்கு கொண்டு வந்தனர்.

இறுதியில் 18. 4 ஓவர்கள் தாக்குப்பிடித்த கொல்கத்தா அணி 168 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதனால் 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற ஹைதராபாத் நடப்பு சீசனை வெற்றிகரமாக நிறைவு செய்தது. ஹைதராபாத் தரப்பில் ஜெய்தேவ் உனத்கட், ஹர்ஷ் துபே மற்றும் இஷான் மலிங்க ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

(எ)



## கடைசி ஒருநாள் போட்டியில் மே. இ. தீவுகள் அணி வெற்றி

டப்ளின், மே 27

அயர்லாந்துக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 197 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட ரி- 20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ஒருநாள் தொடர் நடைபெற்றது. இதன் முதல் ஒருநாள் போட்டியில் அயர்லாந்து வெற்றி பெற்ற நிலையில் 2ஆவது போட்டி மழை காரணமாக இரத்து செய்யப்பட்டது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை. பிரண்டன் கிங் ஓர் ஓட்டத்திலும் எவின் லூயிஸ் 14 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். இந்த இக்கட்டான சூழலில் கை கோர்த்த கீசி கார்டி - ஷாய் ஹோப் இணை அணியை சரிவிலிருந்து மீட்டது. இதில் ஷாய் ஹோப் 75 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அமிர் ஜாங்கோ 22 ஓட்டங்களில் வெளியேறினார்.

இருப்பினும் கீசி கார்டி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி சதமடித்து அசத்தினார். சதத்துக்கு பின்பும் சிறப்பாக விளையாடி மேற்கு இந்திய தீவுகள் அணி 300 ஓட்டங்களை எட்ட உதவினார். இறுதிக் கட்டத்தில் ஜஸ்டின் கிரீவ்ஸ் அதிரடியாக விளையாடி 23 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்தார். இதனால், மேற்கு இந்திய தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 385 ஓட்டங்கள் குவித்தது. கீசி கார்டி 170 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அயர்லாந்து தரப்பில் பாரி மெக்கார்த்தி 3 விக்கெட்களும் லியாம் மெக்கார்த்தி 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து அயர்லாந்து துடுப்பாட்டம் செய்யத் தயாரானபோது மழை பெய்தது. இதனால் ஆட்டத்தை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மழை நிற்க தாமதம் ஆனதால் அயர்லாந்துக்கு 46 ஓவர்களில் 363 ஓட்டங்கள் அடிக்க வேண்டும் என்று இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

பின்னர் இலக்கை நோக்கி களமிறங்கிய அயர்லாந்து அணி மேற்கு இந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 29. 5 ஓவர்களில் 156 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அயர்லாந்து அணியின் கடைசி 2 துடுப்பாட்ட வீரர்கள் காயம் காரணமாக களத்துக்கு வரவில்லை.




இதன் மூலம் மேற்கு இந்திய தீவுகள் அணி 197 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அத்துடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 1-1 என்ற கணக்கில் சமனில் முடித்தது. அயர்லாந்து தரப்பில் அதிகபட்சமாக கேட் கார்மைக்கேல் 48 ஓட்டங்கள் அடித்தார். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் ஜெய்டன் சீயல்ஸ் 3 விக்கெட்களும் வீழ்த்தினார்.

ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை கீசி கார்டி கைப்பற்றினார்.

(எ)

## ஐ. பி. எல். வரலாற்றில் அதிகபட்ச ஓட்டங்கள்

### ஆதிக்கம் செலுத்தும் ஹைதராபாத்

புதுடில்லி, மே 27

ஐ. பி. எல். கிரிக்கெட் வரலாற்றில் அதிகபட்ச ஓட்டங்கள் குவித்து சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

ஐ.பி.எல். தொடரில் டில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 68ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 278 ஓட்டங்கள் குவித்தது.

ஐ.பி.எல். வரலாற்றில் அடிக்கப்பட்ட 3ஆவது அதிகபட்ச ஓட்டம் இதுவாகும். மேலும் ஐ.பி.எல். வரலாற்றில் அடிக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டங்களின் சாதனை பட்டியலில் முதல் 4 இடங்களில் ஹைதராபாத் அணியே ஆதிக்கம் செலுத்துகிறது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமையல்...

அவரின் ஆடையிலும் பட்டு தீப்பற்றியது. பின்னர் அவர் குளியலறைக்குள் சென்று தண்ணீர் ஊற்றி அணைத்து விட்டு எரிகாயங்களுக்கு பற்பசை பூசியுள்ளார்.

இதன்போது அங்கு வந்த கணவர் அயல் வீட்டு பெண்ணொருவருடன் அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளார். அங்கு சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மானிப்பாய் பொலிஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர். தீ காயத்தால் ஏற்பட்ட கிருமித் தொற்று காரணமாக மரணம் சம்பவித்ததாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-05)

## இலங்கைக்கு...

திஸநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பெற்ற குறிப்பிடத்தக்க வெற்றிகளுக்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் புதிய அரசாங்கத்துக்கு நியூசிலாந்து அரசாங்கம் மற்றும் மக்களின் வாழ்த்துகளை தெரிவித்த பிரதி பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவதே தனது அரசாங்கத்தின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் இலங்கையில் நடைபெற்று வரும் சாதகமான முன்னேற்றங்கள் குறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்த நியூசிலாந்து பிரதிப் பிரதமர், அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சமூக மேம்பாட்டுக்கான புதிய அரசாங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டினார்.

நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் தலைமைத்துவத்தை பாராட்டிய பிரதிப் பிரதமர், இந்த வேலைத்திட்டம் இலங்கைக்கு நிலையான அபிவிருத்தியை அடைய உதவும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தச் சூழலில், எதிர்காலத்தில் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவியை மேலும் விரிவுபடுத்த நியூசிலாந்து அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் பிரதிப் பிரதமர் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நியூசிலாந்து பிரதிப் பிரதமர் வின்ஸ்டன் பீற்றர்ஸின் விஜயம் இலங்கை - நியூசிலாந்து உறவுகளில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் என தெரிவித்தார்.

மக்களிடையே நீண்ட காலமாக நிலவும் பிளவுகள் நீண்டகால மோதல்களுக்கு வழிவகுத்துள்ளன என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கியதுடன், நல்லிணக்கச் செயல்பாட்டின் முக்கிய தூணாக தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு தனது அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

விவசாயம், கல்வி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகள் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் பரஸ்பர ஆர்வமுள்ள இந்தத் துறைகளின் முன்னேற்றத்திற்காக நெருக்கமாக செயல்படவும் இணக்கம் தெரிவித்தனர்.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே மற்றும் நியூசிலாந்து வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## கூடிய ஆசனம்...

பேரவை இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

இத் தீர்மானத்துக்கமைய பின்வரும் முடிவுகள் தமிழ்த் தேசிய பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் அறிவிக்கப்பட்டன.

தீர்மானத்திற்கு அமைய எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு-

மாநகர சபைகள் உட்பட தமிழர் தாயகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடந்து முடிந்த தேர்தலில் கூடிய ஆசனங்களை பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்ற சபைகளில் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு தவிசாளர் தெரிவில் ஆதரவு வழங்குவதுடன் அவ்வாறான சபைகளுக்கான தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியப் பேரவை போட்டியிடமாட்டாது.

அதேபோன்று தமிழ்த் தேசியப் பேரவை அதிகூடிய வாக்குகளைப் பெற்ற சபைகளில் தவிசாளர் தெரிவுக்குப் போட்டியிடும். அதன்போது மக்கள் தேர்தலில் வழங்கிய ஆணைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் ஆதரவு வழங்கவேண்டுமென எதிர்பார்க்கிறது.

பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் தமிழ்த் தேசியப் பேரவை இரண்டாவது நிலையில் இருக்கும் சபைகளில் துணைத் தவிசாளர் பதவிக்குப் போட்டியிடும். பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் இரண்டாவது நிலையில் இருக்கும் தமிழ்த் தேசிய கட்சிக்கு துணைத் தவிசாளர் தெரிவுக்கு ஆதரவு வழங்கும்.

எந்தவொரு நிலையிலும் சிங்கள பௌத்த பேரினவாத கட்சிகளுக்கும் அவற்றுக்கு ஆதரவான கட்சிகளுக்கும் இவ்வாறான பதவிகளுக்கான தெரிவுகளுக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது.

இவற்றின் மூலம் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி நிர்வாகத்தை தமிழ்த் தேசிய கட்சிகளின் கைகளில் வைத்திருப்பதுடன் எதிர்காலத்தில் எவ்வித இடையூறுகளுமில்லாது மக்களுக்கான பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியுமென்று பேரவை எதிர்பார்ப்பதுடன் இதன்மூலம் கட்சிகளுக்கிடையே புரிந்துணர்வை வளர்க்க முடியுமென்றும் தமிழ்த் தேசியப் பேரவை நம்புகிறது என கஜேந்திரகுமார் குறிப்பிட்டார். (அ)

## இந்திய மீனவர்...

கடல்வளங்கள் அமைச்சுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று பாராளுமன்ற வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, இரு அமைச்சுகளினதும் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் கடற்படை தளபதி உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

காணிப் பிரச்னை, மீன்பிடி துறைமுகங்களில் நிலவும் பிரச்னைகள், தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் விவகாரம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறுவது உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

மேற்படி பிரச்னைகளுக்குரிய தீர்வுகள் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு மத்தியிலேயே போதைப்பொருள் கடத்தலும் இடம்பெறுகின்றது. எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கும், இலங்கை கடல் வளத்தை பாதுகாப்பதற்கும் தேவையான அனைத்து வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு இக்கூட்டத்தின் கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# ஆனையிறவு உப்பள ஊழியர் போராட்டம் தொடர்கின்றது!

கிளிநொச்சி, மே 27

ஆனையிறவு உப்பளத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தொடர்ந்து 14ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


உப்பளத்துக்கு முன்னால் கொட்டகை அமைத்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

உப்பளத்தின் முகாமையாளர் தங்களை தரக்குறைவாக பேசுவதாகவும், மனிதராகக் கூட பார்ப்பதில்லை என்றும், தங்களது கோரிக்கைகளுக்கு இதுவரை செவிசாய்க்கவில்லை என்றும் போராட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர்.

மேலும், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் இந்த போராட்டம் தொடர்ந்து வருவதாகவும் போராட்டக்காரர்கள் குறிப்பிட்டனர். (அ)

# பாதாள உலகமே நாட்டை ஆள்கிறது!

## வீரவன்ஸ கூறுகிறார்



கொழும்பு, மே 27

பொதுமக்களைக் கொல்வது நாட்டில் ஒரு சாதாரண நிகழ்வாகி விட்டது. இப்போது பாதாள உலகம் நாட்டை ஆளுகிறது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு உரையாற்றிய அவர், நாட்டில் சட்டத்தையும் ஒழுங்குமுறைகளையும் பாதாள உலக நபர்கள் அமுல்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இந்த நாடு அடைந்துள்ள இந்த நிலைமை குறித்து நாங்கள் மிகவும் வருத்தமடைந்துள்ளோம். கதைகளைச் சொல்லி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், இந்த விடயத்தில் மௌன நிலைப்பாட்டை கடைப்பிடிப்பது எங்களுக்கு மேலும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (அ)

## அரசுக்கு ஒரு வார காலக்கெடு...

மதிப்புகளுக்கு மீண்டும் வழங்க ஜனாதிபதி ஒப்புக்கொண்டதாகவும், பின்னர் வரவு-செலவுத் திட்ட ஆவணத்தில் திருத்தங்களைச் செய்ததாகவும், இதன்படி, பொது நிர்வாக அமைச்சு மார்ச் 25 அன்று ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டதாகவும் அவர் கூறினார்.

அந்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில், சுகாதார அமைச்சு ஏப்ரல் 28 அன்று ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டதாக வைத்தியர் விஜேசிங்க குறிப்பிட்டார். அந்த சுற்றறிக்கையில் கூடுதல் நேர கொடுப்பனவுகளுக்கான தவறான கணக்கீடுகள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், பல அடிப்படை மற்றும் தொழில்நுட்பக் கொள்கைகளை மீறுவதாகவும் அவர் கூறினார்.

மேலும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஏப்ரல் 29 அன்று சுகாதார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து ஆட்சேபனைகளை எழுப்பியதாகவும், அப்போது திருத்தப்பட்ட சுற்றறிக்கையை உடனடியாக வெளியிட அமைச்சு ஒப்புக்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார். ஜனாதிபதியின் உத்தரவு மற்றும் சுகாதார அமைச்சரின் பாராளுமன்ற உறுதிமொழிகளை செயல்படுத்தத் தவறியது குறித்து அவர் கேள்வி எழுப்பினார். (அ)

## அலைபேசியுடன்...

நிகழ்வில், பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர் தனது உரையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுக்கு சேவை செய்வதற்கே அரசாங்க நிறுவனங்கள் இருக்கின்றனவே தவிர மக்களை அலைக்கழிப்பதற்கு அல்ல. அத்தகைய நிறுவனங்களின் தலைமையில் இருப்பவர்கள் புத்தாக்கமாக சிந்தித்து செயற்படவேண்டும்.

அந்த வகையில் பிரதேச செயலர் சா. சுதர்சன், நான் யாழ். மாவட்ட செயலராக கடமையாற்றிய காலத்தில் உதவி மாவட்ட செயலராகப் பணியாற்றியவர். அவர் எந்தவொரு விடயத்தையும் விரைவாகச் செய்து முடிக்கக்கூடியவர். உண்மையில் இவ்வாறான சதுரங்கப் போட்டிகளை ஒழுங்குபடுத்திய அவரை பாராட்டுகின்றேன்.

அத்துடன், எதிர்காலத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விவாதப்போட்டி நடத்த திட்டமிடுகின்றார். அவ்வாறான சிந்தனையுள்ளவர்களே - இவ்வாறான தலைமைத்துவ் பண்புகள் உள்ளவர்களே இன்று எமக்குத் தேவையாகவுள்ளனர்.

இன்றைய பிள்ளைகள் அதிகமாக அலைபேசியுடனே நேரத்தைச் செலவிடுகின்றனர். அத்தகைய பிள்ளைகளுக்கு இவ்வாறு சதுரங்கத்தைப் பழக்கி போட்டியில் பங்குபற்றச் செய்த பெற்றோர் பாராட்டுக்குரியவர்கள்.

சதுரங்கம் விளையாடுவதால் மூளை வளர்ச்சியடைகின்றது. அதை ஊக்குவித்த பெற்றோரை வாழ்த்துகின்றேன்- என்றார். (அ)

## யாழ். இந்திய...

இந்த விபத்தில் காரின் சாரதியான இந்திய துணைத் தூதரக அதிகாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த மூவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காரை ஓட்டிச் சென்றவர் நித்திரை தூங்கியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகன், மாமன் ஆகியோர் காரில் பயணம் செய்துள்ளனர். தந்தையே விபத்தில் உயிரிழந்தார். விபத்தில் யாழில் உள்ள இந்திய துணைத்தூதரக உத்தியோகத்தர் சச்சிதானந்த குருக்கள் பிரபாகர சர்மா (வயது 52) என்பவர் பலியானார். அவரின் மனைவி பி. சீதாலட்சுமி (வயது - 50), மகன் பி. அக்ஸய் (வயது 27), மாமனார் சுவாமிநாதன் ஐயர் (வயது - 70) படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் உயிரிழந்தவரின் மனைவி யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் குறித்து ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சீன வர்த்தக அமைச்சர் குழு நாளை இலங்கை வருகிறது!

## முக்கிய சந்திப்புகளில் ஈடுபடும்

கொழும்பு, மே. 27

**சீன வர்த்தக அமைச்சர் வாங் வென்டாவோ தலைமையிலான 115 பேர் கொண்ட உயர்மட்ட பிரதிநிதிகள் குழு நாளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.**

இலங்கையுடனான இரு தரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்தவும், சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் புதிய பொருளாதார முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராயும் வகையிலேயே உயர்மட்ட பிரதிநிதிகள் குழு கொழும்புக்கு விஜயம் செய்வதாக தெரிவித்தள்ள சீன தரப்பு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட அரசாங்கத்தின் பொருளாதார வர்த்தக துறைசார்ந்த பிரதிநிதிகளுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை களை முன்னெடுக்க உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இலங்கை - சீன வர்த்தக மற்றும் முதலீட்டு மன்றத்தின் மாநாடு எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் சீன வர்த்தக அமைச்சருடன், 77 சீன நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் 115 வர்த்தக பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர்.

இந்நிலையில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு போலாந்து வெளிவிவகார அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் 11 பேர் கொண்ட உயர்மட்ட குழு எதிர்வரும் புதன்கிழமை இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரினி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேராத் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் இந்த உயர்மட்ட குழு ஈடுபட உள்ளது.

வர்த்தகம், கடல் துறைமுகங்களுக்கு இடையே ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் உட்பட பல்வேறு துறைகள் குறித்து போலாந்து வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழு அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களில் ஈடுபட உள்ளது. (அ)

# அந்தனி ஜீவாவின் அகவை தின நிகழ்வு

கொழும்பு, மே. 27

மறைந்த எழுத்தாளர் அந்தனி ஜீவாவின் 81 ஆவது அகவை தின நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் பேராசிரியர் சபா ஜெயராசா இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

இதன்போது எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் மற்றும் பல்வேறு துறைசார்ந்தோர் பங்கேற்றிருந்தனர். இந்நிகழ்வில் பேராசியர் சபா ஜெயராசா உரை நிகழ்த்தினார். (அ)

# விவசாயிகளின் வரிப்பணம் 21 கோடி ரூபாய் வீண் விரயம்

## விவசாயிகள் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 27

விவசாயிகளின் வரிப்பணம் வீண்விரயம் செய்யப்பட்டுள்ளதாக தேசிய விவசாயிகள் ஒன்றியத்தின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-கிராமிய மட்டத் தில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டிய உரத்தில் மோசடி இடம்பெற்றுள்ளது. அதேபோன்று ,விவசாய கண்காணிப்புக் குழுக்களுக்காக செலுத்தும் மறைமுக வரியின் ஊடாகவும் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன.

விவசாய கண்காணிப்புக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அபேரத்ன தலைமையில் பாரிய நிதி வீண்விரயம் இடம்பெற்றுள்ளது. கடந்த காலத்தில் விவசாயக கண்காணிப்பு குழுவின் கணக்கை பேணுவதற்காகவும் விவசாய வங்கிகளின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் இலத்திரணியல் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அதுவும் 21 கோடி ரூபாய் இதன் போது செலவிடப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரணியில் உபகரணங்கள் தற்போது பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லைஅனைத்து விவசாயிகள் மத்திய நிலையங்களிலிருந்தும் பெறப்படும் வரியின் ஊடாகவே இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஊழல்மோசடிகள் பல வெளிப்பட ஆரம்பித்துள்ளன. கடந்த ஆணையா ளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்-என்றார். (அ)

# விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே. 27

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 6 பேருக்கு எதிரான வழக்கு ஜூன் மாதம் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

2016ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாட்டுக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் காரியாலயத்துக்கு முன்பாக பாதையை இடைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் ஆராயப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜராகும் ஜனாதிபதி சட்டத்தரணி சுகவீனமடைந்துள்ள காரணத்தால் வேறு ஒரு தினமொன்றை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் வழக்கு ஜூன் 23 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ)

# மகிந்தானந்தவுக்கு பிணை

கொழும்பு, மே. 27

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவை பிணையில் விடுதலை செய்ய கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை காலை உத்தரவிட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மகிந்தானந்த அளுத்கமகே சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டில் விவசாய அமைச்சராக மகிந்தானந்த அளுத்கமகே கடமையாற்றியபோது, தரமற்ற உரங்களை இறக்குமதி செய்வதற்காக சீன நிறுவனத்துக்கு பணம் செலுத்தி யமை தொடர்பில், அவரை கைது செய்து நீதிமன்றத் தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, மகிந்தானந்த அளுத்கமகே கடந்த 19ஆம் திகதி கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜரானதைத் தொடர்ந்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டின் ஏற்றுமதி 5.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வு!

கொழும்பு, மே. 27

2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கையின் ஏற்றும தித் துறை குறிப்பிடத்தக்க மீள் தன்மை மற்றும் நிலையான முன்னேற்றத்தைக் காட்டியது.

மொத்த ஏற்றுமதிகள் 5,583.25 மில்லியன் அமெரிக்க டொலர் களை எட்டின. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 6.9 வீத வலுவான அதிகரிப்பைக் குறிக்கிறது.

இந்த மேல்நோக்கிய போக்கு முக்கிய தொழில்களில் புதுப்பிக்கப் பட்ட உத்வேகத்தை பிரதிபலிக்கிறது மற்றும் வளர்ந்து வரும் உலகளாவிய வர்த்தக நிலப்பரப்பில் இந்தத் துறையின் தகவமைப் புத் திறனை அடிக்கோடிட்டுக் காட் டுகிறது என ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தால் கல்வி அமைச்சின் முன் பதற்றம்

கொழும்பு, மே. 27

பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் குழுவொன்று வளாகத்துக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் பிரதான அலுவலகத்துக்குள் செல்ல முற்பட்டதை அங்கிருந்த பாதுகாப்புப் அதிகாரிகள் தடுத்துள்ளனர்.

அதன் பின்னர் கல்வி அமைச்சின் முன் தரையில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்தனர். (அ)

# சுகாதார சேவையில் முதலீடு செய்வதை நாம் எப்போதும் ஊக்குவிக்க வேண்டும்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, மே. 27

ஆரோக்கியமான மக்களை மையமாகக் கொண்ட ஆரம்ப சுகாதார சேவையில் முதலீடு செய்வதை நாம் எப்போதும் ஊக்குவிக்க வேண்டும் என்று சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

இலங்கை குடும்ப வைத்தியர்கள் கல்லூரியின் 50ஆவது வருடாந்திர கல்வி அமர்வின் தொடக்க விழா கொழும்பில் உள்ள கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதன்மை சுகாதார சேவைகள் பொது சுகாதாரத்தின் அடித்தளம். குடும்ப மருத்துவர் என்பவர் நமது குடும்ப உறுப்பினர்களை நன்கு அறிந்தவர், நமது சமூகங்களை நன்கு புரிந்து கொள்வவர் மற்றும் நோய்களுக்கு எதிரான முதல் பாதுகாப்பாக இருப்பவர்.

நோய்களைக் கண்டறிதல், ஆலோசனை வழங்குதல் மற்றும் பராமரிப்பை ஒருங்கிணைத்தல், சுகாதார மேம்பாட்டின் முன்னணியில் செயல்படுதல் போன்ற பணிகளையும் அவர்கள் செய்கிறார்கள். ஆரோக்கியமான மக்களை மையமாகக் கொண்ட ஆரம்ப சுகாதார சேவையில் முதலீட்டை ஊக்குவிக்க வேண்டும், குடும்ப மருத்துவர்களாக மட்டுமல்லாமல், சமூகத் தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் நோயாளி ஆதரவாளர்களாகவும் பணியாற்றுவதை நாம் காண விரும்புகிறோம்.

கொள்கை வகுப்பாளர்களாக, பொது சுகாதார சேவைகளுடன் ஆரம்ப சுகாதார சேவையை இன்னும் பரந்த அளவில் ஒருங்கிணைக்க வேண்டும். மேலும் விரிவான மற்றும் தொடர்ச்சியான பராமரிப்பை வழங்குவதற்கான அவர்களின் திறனை மேம்படுத்தும் தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் ஆதரவு வழங்கும் அமைப்புகளுடன் பொது பயிற்சியாளர்களை இணைப்பதில் கவனம் செலுத்த வேண்டும். தொற்றா நோய்கள், மனநலப் பிரச்னைகள் மற்றும் வயதான மக்களின் சுமைகளையும் நாம் கவனிக்க வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.